*கவனிக்க.- 2017.04.07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2015 - 2017 අප්‍රේල් මස 12 වැනි බදාදා - 2017.04.12**

*2015 ஆம் இலக்கம் – 2017 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| சட்டமூலங்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 72 |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


***கவனிக்க.*** *– புற்றுநோய் பராமரிப்பு நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2017, ஏப்பிறல் மாதம் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2017, மே மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, ஏப்பிறல் மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

71-B81160-353(2017/4)

# நானாவித அறிவித்தல்கள்

## கொழும்பில் இயங்கும் குடியியல் நீதிமன்ற அதிகாரத்தை செயற்படுத்தும் மேல் மாகாண மேல் நீதிமன்றம்

வழக்கு இல. : HC/ (குடியியல்)/ 03/2017/CO

ராஜகிரிய, நாவல வீதி, இல. 593/1/1 எனும் முகவரியில் அமைந்துள்ள மெக் ட்ரேடிங் (பிரைவேட்) லிமிடட் (Mac Trading (Private) Limited) தொடர்பாக

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 270 (உ) படி மெக் ட்ரேடிங் (பிரைவேட்) லிமிடட் (Mac Trading (Private) Limited) நிறுவனத்தை நீதிமன்றத்தின் மூலம் கணக்குகளை முடித்து மூடுவதற்காக செய்யப்படும் கோரிக்கை தொடர்பான விடயத்தில்;

(கொழும்பில் அமைந்துள்ள குடியியல் நீதிமன்றத்தின் அதிகாரத்தை செயற்படுத்தும்) மேல் மாகாணத்தின், மேல் நீதிமன்றத்திற்கு மேற்படி பெயரிடப்பட்ட நிறுவனத்தின் கணக்குகளை முடித்து மூடிவிடுவதற்காக ஒஸ்ட்ரியா, 4614 மார்க்ட்ரெங்க், கார்ட்னெர்ட்ரசே 5 எனும் முகவரியில் குடியிருக்கும் அல்பிரட் அன்கெர்லெஹ்னர் என்பவரால் அவரது அட்டோனி தத்துவக்காரரான கொழும்பு 10. ஸ்ரீ ப்ரியதர்ஷன மாவத்தை, இல. 83/29 எனும் முகவரியில் குடியிருக்கும் சித்த அனுருத்திகாக சமரநாயக மூலமாக 2017, மாச்சு மாதம் 7 ஆந் திகதி குறித்த நீதிமன்றத்திற்கு மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளதாகவும் குறித்த மனு 2017.07.28 ஆந் திகதி நீதிமன்றம் முன் அழைக்கப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் குறித்த மனு தொடர்பான கட்டளை ஒன்றை புரிவதற்கு உதவி வழங்குவதற்கோ அல்லது ஆட்சேபனை தெரிவிப்பதற்கு விரும்பும் குறித்த நிறுவனத்தின் கடன்காரர் அல்லது பங்குதாரர் குறித்த மனுவை அழைக்கப்படும் போது பிரத்தியேகமாக அல்லது சட்டத்தரணி ஒருவர் அல்லது பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி ஒருவர் ஊடாக குறித்த நோக்கத்திற்காக ஆஜராகுவதற்கு இயலும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது. மேலும், மேற்படி மனுவின் பிரதி ஒன்று அதற்கான கட்டணங்களை செலுத்தப்பட்ட பின்னர் தேவையான நிறுவனத்திலிருந்த கடன்காரர் அல்லது பங்குதாரருக்கு கீழ் கையொப்பமிடும் நபர் மூலமாக வழங்கப்படும்.

கே. சுமிந்த பெரேரா - சட்டத்தரணி
இல. 173/2 ஏ, விஜய குமாரதுங்க மாவத்தை,
கொழும்பு 05,
தொலைபேசி : 011-4061665

**குறிப்பு**.- குறித்த மனு அழைக்கப்படும் போது மன்றில் ஆஜராகுவதற்கு உத்தேசிக்கும் ஏதேனும் ஒருவர் அவ்வாறு புரிவதற்கான தனது நோக்கத்தை மேற்படி பெயரிடப்பட்ட சட்டத்தரணிக்கு வந்து எழுத்துமூலமாக அல்லது தபால் மூலமாக கையளிக்க முடியும். நபரின் அல்லது நிறுவத்தின் பெயர் அல்லது மற்றும் முகவரி அழைப்பு அறிவித்தலில் குறிப்பிட தேவையான படியால் குறித்த நபரால் அல்லது நிறுவனத்தால் அல்லது நபரின் அல்லது நிறுவனத்தின் சட்டத்தரணிகள் இருப்பின் அவர்களால் அல்லது கையொப்பமிடுவதற்கு அல்லது 2017.07.26 ஆந் திகதி பகல் 1.00 மணிக்கு முன்னர் மேற்படி பெயரிடப்பட்ட சட்டத்தரணி நிறுவனத்திற்கு கிடைக்கும் வகையில் நேரக்காலத்தோடு கையளிப்பது அல்லது தபால் செய்வது தேவையானதாகும்.

மனுதாரரின் சட்டத்தரணி.

4-393

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.